**25.07.2022 O.S.No. 120 / 2012 (PW3) செல்வநாதன் த-பெ. வேதமாணிக்கம்,**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

வா.சா.ஆ.1ஆக தாக்கல் செய்துள்ள கிரையப் பத்திரத்தில் சர்வே எண்.26/8 என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் நான்குமால் என்ன என்றால் கிழக்கே சூசை உடையார் சொத்தும், மேற்கே தென்னிவயல் புறம்பு சொத்தும், வடக்கே அடைக்களம் உடையார் சொத்தும், தெற்கே வண்டிப்பாதை என்றும் காணப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஈடு பத்திரத்தில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 26/8 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் கிழக்கு பக்கம் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்க தெரியாது. மற்ற மூன்று பக்கங்களிலும் என்ன நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 கிரையப் பத்திரத்தில் என்ன சர்வே எண் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.26/8 என்று காட்டப்பட்டுள்ளது. சாட்சியிடம் வா.சா.ஆ.5 ஆவணத்தை காட்டி கேட்டபோது அதில் சர்வே எண்.28/6 என்று காட்டப்பட்டுள்ளதாக கூறினார். மேற்படி ஆவணத்தில் என்ன நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்க தெரியாது. கிரையப் பத்திரத்திலுள்ள சொத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் இடையில் சர்வே எண் மாறியிருக்கலாம். அது எப்போது மாறியது என்று எனக்கு தெரியாது. அவ்வாறு சர்வே எண் மாறியதற்காக ஆவணம் எதுவும் நான் வைத்துக் கொள்ளவில்லை. சர்வே எண்.26/8 என்ற சொத்தும், சர்வே எண்.28/6 என்ற சொத்தும் வெவ்வேறான சொத்துக்கள் என்றால் இரண்டு சொத்தும் ஒன்றுதான். சர்வே எண்.26/8ன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 43 செண்டு. சர்வே எண்.28/6ன் விஸ்தீரணம் என்ன என்றால் சரியாகத் தெரியவில்லை. எனது முன்னோர்கள் சர்வே எண்.28/6த்தான் கிரையம் பெற்றார்கள் என்றும், அதன் பிறகு ஏற்பட்ட பத்திரங்களில் சர்வே எண்.26/8 என்று தவறாக பத்திரம் பதிவு செய்ததை வைத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை மோசடியாக பட்டா மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரையப் பத்திரத்தை யார், யாருக்கு கிரையம் கொடுத்தது என்றால் சாட்சி வா.சா.ஆ.5 ஆவணத்தை பார்வையிட்டு பழனியப்ப செட்டியாரிடம் குமார் அம்பலம் என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்று கூறினார். தற்போது சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு குமார் அம்பலம் மகன்கள் என்று கூறிவிட்டு பத்திரத்தில் உள்ளதை என்னால் சரியாக படித்து பார்த்து புரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறினார். மேற்படி பத்திரம் பேரனி அம்பலம் மகன் ராமையா அம்பலம் தனக்காகவும், தன் மக்கள் மைனர்.கருப்பையா 1, பேரனியாகிய உடையப்பன் 2 ஆகியோர்களுக்கு கார்டியனாகவும், 28.06.1918ல் என் பிதாவால் பழனியப்ப செட்டியாரிடம் பெற்ற சொத்துக்களில் அடியில் கண்ட சொத்தை கிரையம் கொடுக்கிறேன் என்று இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி கிரையப் பத்திரத்தை தென்னீவயல் கிராமத்தை சேர்ந்த சிறவிலிகுட்டி மகன் பெரியையா என்பவர்

A DHARANIDHARAN

Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: District Munsif Court Devakottai Date: 2022.07.25 18:20:14 +0530

கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள 28.06.1918 கிரயப் பத்திரத்தை எங்களது தரப்பில் தாக்கல் செய்யவில்லை. அந்த பத்திரத்தின் அடிப்படையில்தான் வா.சா.ஆ.5 கிரயப் பத்திரம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**